# அமுதமொழி

ஸ்ரீ உ. வே. அஷ்டகோத்ரம் V. S. வேங்கடாசாரியர்

ஆர் வசன பூஷணத்தின் ஆழ்பொருள் எல்லாம் அறிவார்? என்று உபதேச ரத்தினமாலையில் ஸ்வாமி மணவாள மாமுனிகள் கேட்டருளுகிறார். இந்தப் பாசுரத்தின் உயிர்நிலை என்னவென்றால், ஆர் அது சொல் நேரில் அனுட்டிப்பார்? என்பதாகும்.

ஸ்ரீ ராமாயணத்தில் முனிவர் கேட்ட முதல் கேள்வி, "கோந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவாந் கச் சவீர்யவாந்?" என்பது. சந்திரனுக்குக் கலைகள் பதினாறாக ஸ்ரீ ராமபிரான் திருக்குணங்கள் பதினாறாக முனிவர் கேட்டமையால் ஸ்ரீ ராமசந்திரன் என்ற திருநாமம் அமைந்தது. சத்யம், அன்பு, பரிவு மூன்றும் நிரம்பியுள்ளது ஸ்ரீ ராமாவதாரம். மேலே காட்டியுள்ள ஸ்ரீவசநபூஷண சாஸ்த்ரம் "குற்றம் செய்தவர்கள் பக்கல் பொறையும், கிருபையும், சிரிப்பும், உகப்பும், உபகார ஸ்ம்ருதியும் நடக்க வேணும்" (சூர்ணை 365) என்று சொல்கிறது.

இந்த ஐந்து தத்வங்களும் ஸ்ரீ ராமபிரான் ஒருவரிடமே பூர்ணமாக நிரம்பியுள்ளன. சாமான்யர்களும் விசேஷாதிகாரிகளும்கூட அனுஷ்டிக்க முடியாத இக்குணங்களை அனுஷ்டித்துக் காட்டியது சக்ரவர்த்தி திருமகன் ஒருவனுக்கே உள்ள ஏற்றமாகும். ஆனதுபற்றியே "படிகொண்ட கீர்த்தி இராமாயண மென்னும் பத்திவெள்ளம் குடிகொண்ட கோயில் இராமானுசன் குணம் கூறும்" என்று பாடிப் பரவுகிறார், அமுதனார்.

ஸ்ரீ ராமாவதாரத்தில் காகாஸுர விருத்தாந்தத்தில் பொறையைக் காணலாம். க்ருபையை "மராமரத்தாரிவை ராணி" நிரூபிக்கும். இங்கே ஈடு வருமாறு: "இவன் ஜீவிக்கிறநாளிலே நாம் செய்யும் நன்மை இவன் விலக்காதொழிவது காண் என்றிருந்தோம். அது அந்நாளில் பெற்றிலோம். நாம் தேடியிருந்தது முந்துறமுன்னம் ஸித்திக்கப்பெற்றோமிறே. நீர் இரக்கிருந்தாராகில், குடல் துடக்குடையாரிலே ஒருவன் செய்யும் அத்தனையன்றோ நாம் இவனுக்கு வேண்டுவன செய்ய. நீர் பின்னைக்கடக்க நில்லீர் என்றாரிறே" வனவாஸத்தின் உகப்பை "இஹ வத்ஸ்யாமி ஸௌமித்ரே ஸார்த்த மேதேந பக்ஷிணா" என்றருளிச்செய்தார். "ஐயர்கோற் கீழே வர்த்திக்க வேண்டுமென்று பார்த்தோம். நடுவிலாய்ச்சிக்கு ப்ரியமில்லாமையாலே போந்தோம். இனி மேலுள்ள நாள் இவர் சிறகின் கீழே வர்த்திக்கப் பாராநின்றோமென்றானிறே" (ஈடு 10.8.6). உபகார ஸ்ம்ருதிக்குரிய இடம், "அபிஷிச்ய ச லங்காயாம்". மகுடாபிஷேகம் பெற்ற விபீஷணனும்வான் மகிழ்ந்தான் என்று சொல்லாமல் பெருமாள் க்ருத க்ருத்யரானார்" என்று ஏற்றம் பொலிய "விஜ்வர: ப்ரமுமோத ஹ" என்றான் வால்மீகி முனிவனும். இப்படிப்பட்ட குணபூர்த்தியைச் சாமானியனும் அனுஷ்டிக்கத்தக்கது எனச் சொல்லும் ஸ்ரீவசநபூஷண சாஸ்த்ரம் எவ்வளவு அருமைப்பாடு உடையது · என்பதை மணவாள மாமுனி ஏழு பாசுரங்களால் நமக்கு உணர்த்தியருளினார். "ஆர் வசன பூடணத்தின் ஆழ்பொருள் எல்லாம் அறிவார்? ஆர் அது சொல் நேரில்

அனுட்டிப்பார்?—ஓர் ஒருவர் உண்டாகில் அத்தனை காண் உள்ளமே எல்லார்க்கும் அண்டாத தன்றோ அது!"

"தெரித்து எழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன்போது" என்ற அருளிச்செயலையொற்றி, "முன்னவராம் நம் குரவர் மொழிகள் உள்ளப் பெற்றோம் முழுதும் நமக்கவை பொழுதுபோக்காகப் பெற்றோம்" என்று பணித்தருளினார் ஸ்வாமி இங்கு. குற்றம் செய்தவர்களிடத்தில் சிரிப்பு காட்டவேணும் என்று நடுவில்—அதாவது முன்னம் இரண்டு, பின் இரண்டு என்று விட்டுச் சிரிப்பை நடுவில் வைத்த அருமைப்பாட்டை மாமுனிகளின் ஸ்ரீஸூக்தியாலே அனுபவிக்கலாம். "அத்ருஷ்ட விரோதமாக இவர்களால் செய்யலாவதொன்றில்லையிறே. பாருஷ்யாதி முகத்தாலே க்யாதி லாபாதி த்ருஷ்ட விரோதங்களிறே இவர்களால் செய்யலாகாது. அப்படிச் சிலவற்றைச் செய்தால் தங்களோபாதி நாமும் இவற்றிலே சபலராய் இவற்றினுடைய ஹாநியைப்பற்ற நெஞ்சாறல் பட்டுத்தளாவு தோமென்றிருந்தார்களன்றோ. இவர்களின் அறிவிலித்தன மிருந்தபடி என் என்று பண்ணும் ஹாஸம்" என்பதாகும்.

இன்று பல இடங்களிலும் நாலுபேர் கூடிக் கைங்கர்யம் (பணி) செய்பவர்களைப் பரிஹாஸம் செய்வதைக் காண்கிறோம். சிரிப்பதுவும், கேலி பேசுவதும் அவர்களது குணாலமாகக் காணக்கிடைக்கிறது. பொறாமையே இதற்குரிய காரணமாகும். "நான் உஷாராக இருந்தேனால் எம்பெருமானும் என்னிடமிருந்து தப்பமுடியாது" என்கிறாள் அஸூயை தேவி :

மயிதத்தா யதா நயாம் விச்வதோஷாப ஹாரிணீ
நசக்ய மீச்வரேணாபி மரவத்ட வர்த்திதும்.
—ஸங்கல்ப ஸூர்யோதயம்.

இப்படிப்பட்ட உலகில் கைங்கர்யமே போதுபோக்காகக் கொண்டுள்ள வ்யக்தி விசேஷங்களைப் பல திவ்ய தேசங்களில் இன்னும் காணமுடிகிறது. அதற்கு ஸ்ரீவசந பூஷண சாஸ்த்ரமும் மாமுனிகளின் வார்த்தைகளுமே உயிர்நிலையாவன.

ஸ்ரீவைஷ்ணவ உலகில் இவ்விருவரைக் குறிப்பிட்டுச்சொல்வான் ஏனென்னில், "அந்தகன் சிறுவன்" திருவல்லிக்கேணிப் பாசுரத்தில் (2–3–6) ஒரு ஐதிஹ்யம் சொல்லப்படுகிறது. ஆண்பிள்ளைகளான பர்த்தாக்கள் ஸந்நிஹிதராயிருக்க, தூரஸ்தனான க்ருஷ்ணன் பேரைச்சொல்லுவான் என் என்று எம்பாரைக் கேட்க, "அறிந்தோமே முன்பே சில ஸூரு ஸூரு கேட்டு வைத்தாள் போலே காணும். "மஹத்யாபதி ஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோ பகவான் ஹரித்" என்று. இது தன்னைப் பட்டரைக்கேட்க, பர்த்தாவின் கையைப் பிடித்துப் போகாநின்றாலும் இடறினால் "அம்மே" என்னக்கடவது காண் என்றருளிச்செய்தார். அதாயிருக்கச் செய்தே விசைப்பு கிடந்தபடி காணும். இதே மாதிரி அத்தனை ஆசார்யர்களும் ஆழ்வார்களும் துணை நின்றாலும், ஸம்ஸாரிகளுக்கு ஊன்றுகோலாகச் சொல்லி உறுதியளிப்பது இவர்கள் இருவரே. இவர்களையே தஞ்சமாகப் பற்ற வேண்டும்.

இப்படி எழுதுவதற்குத் தக்க சான்றுகள் உள. விரிவுக்கு அஞ்சி ஒன்றிரண்டு எழுதி முடிக்கிறேன். ஸ்ரீவசனபூஷண சாஸ்திரத்தில் முதல்முதலில் எடுத்துச் சொன்ன சூர்ணையில் ஸ்ரீ ராமாயணமே எடுத்துக்காட்டாக உள்ளது. அசைவிலா வேத மதனுள் அனைத்தையும் வசன பூடணம் வழியாலருளிய மறையவர் சிகாமணி உலகாரியன்.

அதற்கு வ்யாக்யான மருளிய மண வாள மாமுனிகளின் மேதா விலாசம் கற் பனைக்கு எட்டாத மஹத்வமாகும். பல ஸம்ஹிதைகளிலிருந்தும், புராணங்களி லிருந்தும், அருமைப்பட்டிருக்கும் பல க்ரந்தங்களிலிருந்தும், ஸ்வாமி உதா ஹரித்தருளியிருப்பது, நமது பாக்கிய மாகும்.

இதோடுமட்டுமல்லாமல் ஸ்வாமி நாடெங்கும் சஞ்சரித்தது, திக்விஜயம் செய்தது, மடத்தில் தீயிட்டவரை க்ஷமா விஷயமாக்கியது, எறும்பியப்பா பெரிய ஜீயரை ஸேவித்து ஸப்த கோத்ர வ்ய வஸ்தை செய்தருளியது, திருவநந்தாழ் வானை ஸேவை ஸாதித்தது, ப்ரதிவாதி பயங்கர அண்ணா திருமலையில் திருமஞ் சனம் ஸமர்ப்பித்த சமயம் அழகிய மண வாள மாமுனி வைபவமான ஐதிஹ்யத்தை அருளிச்செய்தபடியாலே பரிமள த்ரவ் யங்கள் வாஸனை விஞ்சித், திருமஞ்சன வாஸனை அதிகமாயிருக்கிறபடி கண்டு அப்பன் உகந்தது, இப்படியாக அடுக்கிக் கொண்டே போகலாமாகிலும் ஆறு விஷ யம் குறிப்பிட்டு, ஸ்வாமி ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீயை நிர்வஹித்த பாங்கினைக் கால மெல்லாம் உணரும்படியாய் இருப்பதைக் காணலாம் எனக் கட்டுரையை நிறைவு செய்கிறேன் அடியேன்.

"அநந்தரம் ஆசார்ய ஹ்ருதயத்திற்கு வ்யாக்யானஞ் செய்தருளத் திருவுள்ளமாய் திருமேனியில் தௌர்ப்பல்யத்தையும் பாராமல் திருவணையிலே சாய்ந்தருளின படியே திருக்கழுத்து நோவத்திருவெ ழுத்துச் சாத்தியருளும்படியைக் கந்தாடை யண்ணன் கண்டு 'தேவரீர் இப்படி ஏதுக் காக ப்ரயாஸப்படுகிறீர்?" என்ன, ஜீயரும் 'உம்முடைய புத்ர பௌத்ராதிகளுக்காகப் படுகிறேன்" என்றருளிச்செய்தார். அக் காலத்திலே திருமலை நம்பி திருவம்சஸ்த் தரான எட்டூர் சிங்கராசார்யர் ஜீயரு டைய அப்ரதிம ப்ரபாவத்தைக் கேட்டுப் பெருமையும் நாணும் தவிர்ந்து ஆகிஞ் சந்யாநந்யகதித்வங்களை முன்னிட்டு அநந் யசரணராய் அவர் திருவடிகளிலே ஆச்ர யிக்க, அவரையும் க்ருபை செய்தருளி, அதன் மூலமாக வந்த த்ரவ்யத்தையும் ஆழ்வார் திருக்கோபுர கைங்கர்யத்துக்குத் திருநகரிக்குப் போகவிட்டருளினார். அக் கைங்கர்யம், சிறிது குறைவாக இருக்க, பின்பு ஜீயர் நாயனார் அக்குறையைத் தீர்த்தருளிச் சிகர பர்யந்தமாக நிறை வேற்றியருளினார். பின்பு போளிபாக்கம் நாயனாரை அழைப்பித்தருளி அவர் மூல மாக, ஸப்த கோத்ர நிபந்தனை செய்தருளி, அதில் இந்த எட்டூர் சிங்கராசார்யரையும் கூட்டிக் கொண்டு அஷ்ட கோத்ர ஸங்க லையாயிருக் என்று நியமித்தருளினார்.

---